Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO.65/2018, Cr.No.9/2018, Kurisilapet PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.6, Page.No.

| | |
|---|---|
| **பெயர்** | சோமு |
| **வயது** | 45 |
| **தந்தை/கணவர் பெயர்** | சின்னக்குழந்தை |
| **கிராமம்** | குரிசிலாப்பட்டு |
| **மாவட்டம்** | திருப்பத்தூர் |
| **தொழில்** | கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 09th day of October 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u> (எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 2018 ம் ஆண்டு தேதி மாதம் நினைவில்லை. மாலை 04.30 மணியளவில் அண்ணாநகரில் உள்ள மாரியம்மன் கோவில் அருகில் நான் நின்றிருந்த போது ஆலங்காயம் செல்லும் சாலையில் இடது புற ஓரமாக இளையராஜா மற்றும் அபிநயா ஆகியோர் நடந்து சென்று கொண்டிருந்தபோது அவர்களுக்கு பின்னால் திருப்பத்தூரில் இருந்து ஆலங்காயம் நோக்கி வந்த பாண்டியன் என்ற தனியார் பேருந்து அவர்கள் மீது பின்புறமாக மோதியது. மேற்படி விபத்தில் இளையராஜா, அபிநயா மற்றும் அவர்களுடன் வந்த மற்றொரு குழந்தைக்கும் காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் அவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேற்படி விபத்தில் அபிநயா இறந்து விட்டார் மேலும், இளையராஜாவிற்கு கால் நசுங்கி விட்டது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரின் பெயர் எனக்கு தெரியாது ஆனால் அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். விபத்து ஏற்படும் நான் தொலைவில் இருந்தேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

விபத்து நடந்த சாலையின் ஓரத்தில் என்னுடைய வீடு இல்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நான் டிரைவர் வேலை செய்வதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. திருப்பத்தூர் – ஆலங்காயம் சாலையானது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லும் சாலை. தார்சாலையின் அகலம் 20 அடி இருக்கும் என்றால் எனக்கு படிக்க தெரியாததால் சரியாக கூற முடியவில்லை. இரண்டு பேருந்துகள் செல்லும் அளவிற்கு இருக்கும். தார்சாலையின் இரண்டு புறமும் 5 அடி அகலத்திற்கு மண் சாலை உள்ளது என்றால் சரியல்ல. அந்த சாலையில் யாருடைய வீடுகள் அமைந்துள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் நடந்து சென்றதை 10 அடி தொலைவில் இருந்து நான் பார்த்தேன். விபத்து ஏற்பட்ட சாலையில் வேகத்தடை உள்ளது என்றால் உள்ளது ஆனால விபத்து நடந்ததற்கு பின்னரே அது போடப்பட்டது. மேற்படி சங்கதியை போலீசார் விசாரணையில் நான் கூறுவில்லை. விபத்து நடந்த அன்று மாலை VSKR என்ற பேருந்து ஆலங்காயம் – திருப்பத்தூர் சாலையில் இருந்தது என்றால் சரியல்ல. இளையராஜா, அபிநயா மற்றும் ஜோதிஸ்ரீ ஆகியோரின் மீது பின்புறமாக பேருந்து மோதியது என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. விபத்து நடந்து சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :- இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.10.09 18:28:32 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.